Corrected

April 26, 2015

# வாய்ப்புகளும், பிரச்சினைகளும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்

வாய்ப்பு, பிரச்சினை என்பது மனிதன் தன்னை வாய்ப்பாகவும் அல்லது பிரச்சினையாகவும் காண்பது. **உள்ளது ஒன்று, காண்பது இரண்டு.** காண்பது காண்பவனைப் பொருத்தது. வாய்ப்பு என்பது வாழ்வில் அரிது. பிரச்சினையென்பது எங்கும் எப்பொழுதுமிருப்பது. பெரிய மனிதன் தனக்கேயுரிய பெரிய வாய்ப்பைத் தானே உற்பத்தி செய்து கொள்வான். தியாகம், தீரம், ஆன்மீக ஆர்வம் ஆகியவற்றால் வாய்ப்பை உற்பத்தி செய்யலாம். எளிய மனிதன் என்றும் செய்வது வரும் வாய்ப்பைப் பிரச்சினையாக்கி அதனுள் திளைப்பது. அலெக்ஸாண்டர் டூமாஸ் உலகப் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு ஆசிரியர். அவர் எழுதிய கதைகள் 400க்கு மேல். அவற்றுள் பேர் போனவை Three Musketeers, Count of Monte Cristo என்பவை. 3 Musketeers இல் தத்தானியன் இளைஞன். ஆனால் அவனே கதாநாயகன். நீண்ட சர்வீஸூக்குப் பின் ஓய்வு பெற்றான். அவனுடைய பணியாள் ஒரு மளிகைக்கடை ஆரம்பித்து நடத்துகிறான். தத்தானியனிடம் உள்ளது பெரும் பணமில்லை. ஓய்வு பெற்றபின் என்ன செய்யலாம் என யோசிக்கிறான். அவன் வீரன். வீர தீரச் செயலுக்கு ஆபத்துண்டு. ஆபத்தைத் தவிர்த்து ஜெயித்தால் பெரும் வெற்றியுண்டு. எந்த வேலைக்கும் பணம் தேவை. ஒரு திட்டம் மனதில் எழுந்தது. அது வெற்றி பெறாவிட்டால் மரணம் அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும். வெற்றி பெற்றால் பெரும் புகழும் பெரும் தொகையும் கிடைக்கும். ஜனநாயகம் பிறந்தபொழுது இங்கிலாந்தில் சார்லஸ் தலையை வெட்டினர். அவர் மகன் சார்லஸ் II ஆக வேண்டியவன் ஹாலந்தில் சென்று வசிக்கிறான். அரசன் தலையை வெட்டியவன் கிராம்வெல் நாட்டை ஆண்டான். அவனுக்குப் பின் Monk மாங்க் என்பவன் ஆள்கிறான். இதற்கிடையில் அரசனே மீண்டும் வரவேண்டும் என மக்கள் பெருவாரியாக அபிப்பிராயப்பட்டனர். **தத்தானியன் வெளிநாட்டிலுள்ள அரசகுமாரனுக்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பைக் கருதுகிறான்.** இழந்த பட்டத்தை Charles II பெற்றால் அதற்கு தத்தானியன் உதவி செய்தால் தனக்கு பெரும் வெகுமதி கிடைக்கும் என்பது அவன் திட்டம். தன் பணியாளனிடம் பணம் உண்டு. அவனிடம் போய் தன் எண்ணத்தை கூறுகிறான். Monk என்பவன் இன்றைய அரசன். அவனைச் சிறைப்பிடித்து இரண்டாம் சார்லஸிடம் ஒப்படைப்பது அவன் திட்டம். திட்டத்தைக் கேட்ட பணியாள் அதிர்ச்சியடைகிறான். பேராபத்து எனக் கூறுகிறான். ஆனால் சம்மதித்து பாதி பணம் முதலாகத் தருகிறான். **பணம் முக்கியம். ஆனால் அரசனைக் கடத்திச் செல்வது அவன் இராணுவம் முழுவதும் எதிரியாவது.** தத்தானியனுக்கு ஒருவனைப் பார்த்தால் அவன் வீரன், நம்பலாம், கோழை, நம்ப முடியாது என்பது தெரியும். முகம் தெரியாத 10 பேரை தனித்தனியே கண்டு எதையும் சொல்லாமல் மீன் பிடிக்கப் போவதாகக் கூறி சேர்த்துக் கொள்கிறான். வழக்கத்திற்கு அதிகமான – இருமடங்கு – கூலி தர சம்மதிக்கிறான். ஒவ்வொருவர் கையிலும் கணிசமாக அட்வான்ஸ் கொடுத்து தயாராகும்படிக் கேட்கிறான். தான் போகும் வேலை வெற்றி பெற்றால் பெரும் போனஸ் தருவதாக வாக்கு தருகிறான். படகு ஒன்றை வாங்கி அதில் ஒரு மனிதனை வசதியாக மறைத்து வைக்கும்படி அறை ஒன்று கட்டி விட்டான். வெளியில் பார்க்க அறை தெரியாது. மீன் பிடிக்கப் போய் மீன் பிடிக்கிறார்கள். Monk சேனாதிபதி, அரசன். அவன் தனிமையில் உலாவப் போகும்பொழுது அனைவரும் பின்னால் போய் அவனை சிறைப்பிடித்து படகில் அடைத்து, படகை ஹாலந்திற்கு எடுத்துப் போகிறான். இரண்டாம் சார்லஸிடம் Monkயை ஒப்படைக்கிறான். சார்லஸ் மகிழ்ந்து ஏற்பான் என தத்தானியன் எதிர்பார்த்தான். **சார்லஸ் இது ஈனச்செயல், இதன் பலனைத் தான் ஏற்க முடியாது எனக் கூறி,** தத்தானியனையே Monkயை அவனைப் பிடித்த இடத்தில் கொண்டு போய் விடும்படிக் கூறுகிறான். தத்தானியன் தன் திட்டம் பூரண தோல்வியடைந்ததாக ஏற்றுக்கொள்கிறான். ஏமாற்றி பரிசு பெற தத்தானியன் திட்டம் போட்டான். அவன் உண்மை வீரன், அரசனுக்கு சேவை செய்வது அதன் இலட்சியம். அதற்கு வெகுமதி எதிர்பார்த்தான். அது தோற்றது. Monk இரண்டாம் சார்லஸ் பெரும்-

தன்மையைக் கண்டு இது போல் நடக்க அரசனால் தான் முடியும். அரசனை நாடு கடத்தியது தவறு. **அவன் பெரும்தன்மையை ஏற்று இரண்டாம் சார்லஸ் நாட்டுக்கு வந்து பட்டத்தை ஏற்குமாறு அழைக்கிறான்.** இரண்டாம் சார்லஸ் திரும்பி வந்து பட்டத்தை ஏற்று தத்தானியனுக்கு பரிசு தருகிறான். தத்தானியன் £100,000 பரிசு எதிர்பார்த்தான் சார்லஸ் £300,000 பரிசு தருகிறான். அவன் உருவாக்கிய வாய்ப்பு பெரியது. அவனுடைய ராஜ விஸ்வாசம், தைரியம், தீரச்செயல், அவன் வாய்ப்பை பெரிதுபடுத்தி பெறும் பரிசு தருகிறது. **வாய்ப்பு வாய்மையால் பெரியதாகி மிளிரும்.**

டாக்டர் தார்ன் பரம்பரையான பிரபு குடும்பத்தைச் சார்ந்தவர். தகப்பனார் பாதிரியார். அண்ணன் சுக ஜீவனம். வருமானம் சொற்பம் £150. அண்ணனுக்கு மட்டமானவர்களுடன் சேர்ந்து குடிப்பது பழக்கம். அதில் முக்கியமானவர் ரோஜர். கொத்து வேலை செய்யும் மேஸ்த்திரி. மேஸ்த்திரியின் தங்கை மேரி அழகி, நல்லவள் என்று பெயரெடுத்தவர். டாக்டர் அண்ணன் ஹென்ரி. ஹென்ரி மேரியுடன் பழகினார். திருமணம் செய்வதாக வாக்குக் கொடுத்தான். திருமணமாகுமுன் அவள் கர்ப்பவதியானாள். மேஸ்த்திரி குடிகாரன். செய்தியறிந்து குடித்து விட்டு வருகிறான். ஹென்ரி அவனை மகிழ்ச்சியாக வரவேற்கிறார். குடிகாரன் ஹென்ரியை அடித்துக் கொலை செய்து விட்டு ஜெயிலுக்குப் போகிறான். டாக்டர் கோபத்தால் கொதிக்கிறார். விவரம் தெரிந்து கோபம் அடங்கி கொலைக்காரன் சார்பில் வழக்கு நடத்தி இது கொலையல்ல, ஆத்திரம் அசம்பாவிதமானது என வாதாடி கொலை செய்தவனை ஆறாம் மாதம் விடுதலை செய்கிறார். அது முதல் ரோஜருக்கு டாக்டர் மீது அபார நம்பிக்கை எழுகிறது. மேஸ்த்திரி வேலையில் கெட்டிக்காரன். **மற்றவரை வேலை செய்ய வைப்பதில் மிக கெட்டிக்காரன்.** குடி அவனுக்கு முதல். குடித்தால் யோசனை எழும். எந்த அளவு குடித்தால் மயக்கம் வருமோ, அந்த அளவு குடித்தால் ரோஜருக்கு உற்சாகம் வரும். குடித்தபின் ரோஜர் புது மனிதன். எவருக்கும் தோன்றாத எண்ணங்கள் தோன்றும். 10 பேர் செய்யும் வேலையை ஒருவரே செய்யும் யோசனை எழும். ரோஜர் பிரபலமானான். பெரும் பணம் சம்பாதித்தான். **மேஸ்த்திரி இன்ஜீனியரானான்.** இதுவரை எவரும் கட்டடம் கட்டாதது போல் ரோஜர் கட்டினான். நாடு முழுவதும் அவனை நாடியது. 4 பேர் சம்பாத்தியம் அவனுடையது. 40 பேர் சம்பாதிப்பதையும் சம்பாதித்தான். ஒரு நாள் ஒரு மணி நேரம் அவன் செய்த வேலைக்கு £60000 பணம் கிடைத்தது. அமெரிக்கா, பம்பாய், சைனாவிலிருந்து ஆர்டர் வந்தது. அவனுக்கு ஒரே மகன். தகப்பனார் பழக்கத்தை இளம் வயதில் கடைப்பிடித்தான். தகப்பனார் திறமை வரவில்லை. Oxfordல் படித்தும் உயர்ந்த பழக்கம் வரவில்லை. ரோஜர் ஜெயிலிருந்த பொழுது மேரிக்கு பெண் குழந்தை பிறக்கிறது. மேரியை ஒரு வியாபாரி காதலித்தான். பெண் பிறந்த பின்னும் அவளை மணக்க விரும்பினான். மணந்து அமெரிக்காவிற்கு அழைத்துப் போக முடிவு செய்தான். அவன் குழந்தையை ஏற்கவில்லை. டாக்டர் குழந்தையை லண்டனில் வளர்ப்பதாக வாக்குக் கொடுத்து மேரியை அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டு, குழந்தை இறந்ததாக ரோஜரிடம் சொல்லி விடுகிறார். **இவை பெரும் அசம்பாவிதங்கள். இவை எப்படிப்பட்ட பிரச்சினை. வாய்ப்பு என நினைக்க முடியுமா?** இவை அனைத்தும் உண்மையில் வாய்ப்பாவதே கதை. உள்ளூரில் கிரஷாம் மனைவிக்கு உட்பட்டு பல தேர்தலில் நின்று £100,000 கடன் பெறுகிறார். கடனைக் கொடுத்தவர் ரோஜர். கிரஷாம் தன் முக்கியச் சொத்தை ரோஜருக்கு விற்றும் கடன் குறையவில்லை. லேடி ஆரபெல்லா கிரஷாம் மனைவி. 12ம் வயதில் மேரி இலண்டனிலிருந்து ஊருக்கு வருகிறாள். தெளிவான கம்பீரமான பெண் குழந்தையாக இருப்பதால் பிரபு வீட்டில் அனைவரும் அவளைப் பிரியமாகச் சேர்த்துக் கொள்கின்றனர். பிரபுவின் பெண் குழந்தைகளுடன் படிக்கிறாள், வளர்கிறாள். பிரான்ங்க் பிரபுவின் மகன். பிரான்ங்க்கும் மேரியும் சம வயதினர். குடும்பம் கடன்பட்டு விட்டதால் பிரான்ங்க் பணக்காரியை மணக்கத் திட்டமிட்டு பணக்காரியை நாடுகிறார்கள். பணக்காரிக்கு வயது 40. பிரான்ங்க்கை கேலி செய்து உபதேசம் செய்து அனுப்புகிறாள். பிரான்ங்க் விளையாட்டுப் பிள்ளை.

கல்லூரியில் படிக்கிறான். மேரியைத் திருமணம் செய்வேன் என்று கூறுகிறான். அவன் தாயாருக்கு பயம் வருகிறது. 20 வருஷமாகப் பழகிய டாக்டரையும், 10 வருஷமாகப் பழகிய மேரியையும் வீட்டிற்கு வரக்கூடாது என உத்தரவிடுகிறாள். டாக்டருக்கு பெருத்த அவமானம், மேரிக்கு சொல்லொணாத் துயரம். பிரச்சினை மேல் பிரச்சினை எழுகிறது. மேரி டாக்டரிடம் அவர்கள் அந்தஸ்து பற்றிக் கேட்கிறாள். அவரால் எந்த பதிலும் கூற முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்கிறது. ரோஜருக்கு உடல் நலம் குன்றி படுக்கையாகிறான். உயில் எழுதி டாக்டரை டிரஸ்டியாக நியமிக்கும்பொழுது தன் மகன் 25 வயதிற்கு முன் இறந்து விட்டால் சொத்து சகோதரியின் பெண்ணுக்கும் போகும் என எழுதுகிறான். டாக்டருக்கு திகில் எழுகிறது. ரோஜரிடம் உள்ளதை சொல்ல முடியவில்லை. சொல்வது அவசியம். திணறி சொல்கிறார், ரோஜர் அவளைக் காண ஆசைப்படுகிறான். ரோஜர் இறந்தபின் **சொத்து மகனுக்குப் போய் டாக்டர் கார்டியனாகிறார்.** மகன் தனக்கு இல்லாத உரிமையைக் கொண்டாடி டாக்டர் உயிரை எடுக்கிறான். டாக்டர் மனம் இருதலைக்கொள்ளி எறும்பாகிறது. மனத்தாலும் மகன் இறக்க வேண்டும் என அவரால் நினைக்க முடியவில்லை. மகன் மேரியை மணமுடிக்க ஆசைப்படுகிறான். டாக்டர் மறுத்து விடுகிறார். டாக்டர் மனப்போராட்டம் தினசரி புயல், சூறாவளி. மகன் நிலை மோசமாகியது. அவனைக் காப்பாற்ற அவர் எடுக்கும் முயற்சிகளை மகன் மறுக்கிறான், வெறுக்கிறான். இவையெல்லாம் வாய்ப்பு என அறிவு ஏற்குமா? மகனும் இறந்து விடுகிறான். டாக்டர் பல வக்கீல்களைச் சந்தித்து மேரியின் உரிமையை நிலைநிறுத்தி மேரிக்கு ஏற்பட்ட புதிய செல்வத்தை வெளியிடுகிறார். நிலைமை தலைகீழே மாறி பிரச்சினைகள் அத்தனையும் வாய்ப்பாகின்றன. கிரஷாமுக்கு ஒன்றும் புரியவில்லை. புரிய வேண்டும் எனவும் அவர் முயலவில்லை. **அன்றிரவு மனைவியிடம் செய்தியைக் கூறுகிறார்.** அவள் அதிர்ந்து மூர்ச்சையடைகிறார். மூர்ச்சை தெளிந்து Dear Mary என்கிறாள். மேரிக்கு புதிய அந்தஸ்து வந்து விட்டது. புதிய மரியாதை வந்தது. எதிர்ப்பு எல்லாம் மறைந்து விடுகின்றன. ஊரே கோலாகலமாகிறது. திருமணம் Duke, Bishop உள்பட அனைவரும் வந்து சிறப்பாக நடக்கிறது. பிரச்சினையாக படிப்படியாக வளர்ந்தவை அனைத்தும் பின்னால் வாய்ப்பாகியது. முன்கூட்டி அது நமக்குத் தெரியும். பார்வைக்குப் பிரச்சினை. உள்ளுறை விஷயம் வாய்ப்பு. உலகில் தீமையில்லை, குறையில்லை, குற்றமில்லை. எல்லாம் நம் பரம்பரையில் உள்ளது என்பது ஸ்ரீ அரவிந்தம். வாய்ப்பே பிரச்சினை. வாய்ப்பாகக் கருதினால் வாய்ப்பு. பிரச்சினையாகக் கருதினால் பிரச்சினை. உலகம் சிரித்த நகைமுகமுடையது என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். மனிதன் அஞ்ஞானத்தை விட்டு ஞானம் பெற்றால் பிரச்சினை வாய்ப்பாகும். ஆன்ம விழிப்பு மனிதனுக்கு ஏற்பட அஞ்ஞானம் அரங்கமாகச் செயல்படுகிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். மரபிலும் இந்த ஞானம் உண்டு. வற்புறுத்தி விளக்கிக் கூறவில்லை. தீமையை விலக்கி வாழ முயன்றனர்.

**தானே வரும் வாய்ப்புக்கு வாய்ப்பின் அம்சங்களுண்டு. நாமே ஏற்படுத்தும் வாய்ப்பு பிரச்சினை.** இரண்டாவது வாய்ப்பு ஆசைக்கும், ருசிக்கும் உண்டு. Mrs. பென்னட் தானே வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அதன்வழி பிரச்சினையை எழுப்புவார். பொதுவாக வந்த சிரமம் விலகியவுடன் புது சிரமத்தை மனிதன் மெனக்கெட்டு ஏற்படுத்துவான். அன்னையிடம் வந்த பிரச்சினைகளில் பெரும் பங்கு மனிதன் மெனக்கெட்டு ஏற்படுத்திய பிரச்சினைகளே. லேடி ஆரபெல்லா புருஷனை எலக்ஷனுக்கு நிற்கச் சொன்னார். தோற்றபின் பெரும் செலவாயிற்று £10,000. அடுத்தபடியும் நிற்கக் கட்டாயப்படுத்தினார். தோற்றது. மேலும் £10000 செலவு. செலவு ஒரு வகையில் அதிகமானால் அதன் மூலம் பல வழிகளிலும் அதிக செலவாகும். லண்டனில் உள்ள வீடு £1000 செலவு வைக்கிறது. பெருமைக்காக செய்வது எலக்ஷன் செலவு. தன் சகோதரனுக்கு £30000 வருமானம், கணவனுக்கு £14,000 வருமானம். அவர் போல இவர் வாழ்வதானால் கடன் ஏற்படும். கடனுக்காக ஒரு சொத்தை Boxal Hill — விற்றனர். அதை வாங்கியது ரோஜர். தற்சமயம் கடன் £100,000 வட்டி £5000. வருமானம்

£14,000 பவுனில் £5000 வட்டி கொடுத்தபின் பழைய செலவு குறையவில்லை. அதற்காகக் கடன் வாங்குகிறார். கடன் எலக்க்ஷனால் வந்தது. நாயால் வந்தது என ஆரபெல்லாவும் அண்ணியும் கிரஷாமைத் திட்டுகின்றனர். டன்ஸ்டபிள் £200,000 பணமுள்ளவள். கெட்டிக்காரி. அவள் பணத்திற்காக அவளைப் பலரும் மணக்க விரும்புகின்றனர். பிரான்ங்க் இளைஞர் 21 வயது அவளுக்கு 40 வயது. அவளை அவள் பணத்திற்காக தாயாரும், மாமியும் சொல்வதைக் கேட்டுப் பின்தொடர்கிறான். **பணம் படைத்தவர்கள் திறமைசாலிகள்.** எவ்வளவு இதமாகப் பழகினாலும் பணத்து விஷயத்தில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். டன்ஸ்டபிளை ஒரு பெரிய கடன்காரன் தங்கை அண்ணனுக்கு அவளைக் கட்டி வைக்க வருஷக்கணக்காக பெரும்பாடுபடுகிறாள். முடிவாக டன்ஸ்டபிள் “உன் அண்ணனை எனக்குப் பிடிக்கும். நான் என் பணத்திற்காக என்னை நாடுபவர்களை மணக்க மாட்டேன். எனக்கு என் வக்கீல்கள் அளவுக்கு விஷயம் தெரியும். உன் அண்ணன் கடனை நான் எடுத்துக் கொண்டு ½% வட்டி – £500 — மிச்சம் செய்ய உதவுவேன். என்னை ஏமாற்ற முடியாது. உன்னை எனக்குப் பிடிக்கும் என்பதால் உன் அண்ணனை மணந்து என் சொத்தை நான் இழப்பவளில்லை” என்று கூறுகிறார். சிறுவன் 21 வயதில் அவளைப் பின்தொடர்ந்து அவமானப்பட்டான். இந்த கதையில் எழும் பெரும் வாய்ப்புகள் அனைத்தும் Dr. தார்னின் பொறுமையாலும், பொறுப்பாலுமாகும். மேரி சிறுமியானாலும் தெளிவு, தெம்பு, பெருந்தன்மையுள்ளவள். வாய்ப்பு அவளுக்காக முதலிலிருந்து உருவாகிறது. லேடி ஆரபெல்லா அவள் அண்ணி இருவரும் குறுக்கு வழி, கோணல் வழி, இல்லாத பெருமை அதிகாரம் ஆகியவற்றை அல்ப புத்தியுடன் அடமாகச் செய்து முதலில் எழுப்பியது கடன், இரண்டாவது சொத்து விலை போயிற்று, பிரான்ங்க்கை தொந்திரவு செய்து Oxfordக்குப் போகச் சொல்லி டன்ஸ்டபிளைத் தொடரச் சொல்கிறார்கள். டாக்டரை நிறுத்துகிறார்கள். லேடி ஆரபெல்லாவுக்கு கான்சர். Dr. தார்ன் அதை வெளியில் சொல்லவில்லை. டாக்டர் தார்ன் கெட்டிக்காரர். தன் மருந்துகளால் கான்சர் வலியைக் கட்டுப்படுத்துகிறார். **அது இயலாத காரியம்**. ஆரபெல்லா அதிகாரம் செய்ய மற்றவர் மரியாதையைக் குறைக்கப் பிரியப்படுபவள். அறிவில்லாமல் டாக்டரை மாற்றுகிறாள். பெரிய டாக்டர் என்றாலும் அவருக்கு கான்சரை கண்ட்ரோல் செய்யத் தெரியவில்லை. தார்ன் பீஸ் 7 ஷில்லிங். பெரிய டாக்டருக்கு 21 ஷில்லிங். அவர் வருகிறார். வலி வருகிறது. இலண்டனில் பிரபலமான டாக்டர். அவர் பீஸ் £300. 300 மடங்கு பீஸ். அவர் வந்து பார்த்து விட்டு டாக்டரை மாற்றியது தவறு மீண்டும் பழைய டாக்டர் வர வேண்டும் என்கிறார். அவள் செய்வது அனைத்தும் வம்பு, வம்பை விலை கொடுத்து வாங்குவது, அவள் செய்வது அனைத்தும் பிறருக்கு தொந்திரவு. அவதிக்கு ஆபத்து. பெண். அடக்கம் தேவை என்பதே அறியாதவள். எல்லா தவற்றையும் செய்து விட்டு காரியம் கெட்டபின் மற்றவர்களை குற்றம் சாட்டுகிறாள். இவற்றை எல்லாம் மீறி பண்பு, நிதானம், பொறுமை, சாந்தம் அந்த அடாவடிப் பெண்ணுக்கே அதிர்ஷ்டம் கொண்டு வரும்பொழுது **அது மயக்கமாய் வருகிறது.** வெட்கமின்றி Dear Mary என்று மூச்சை தெளிகிறாள். மேரியைப் பார்க்க ஓடத்தயாராக இருக்கிறாள். அவள் நோக்கம் **“பிரச்சினைகளை உருவாக்கும் ‘வாய்ப்பைப்’ தேடிப்போவது.”** அடங்க வேண்டியவர் அதிகாரம் செய்தால் வாய்ப்பு பிரச்சினையாகும் என்பதை இக்கதை பக்கம்பக்கமாகக் காட்டும். வாய்ப்பு பிரச்சினை சம்பந்தமான வாழ்வின் அம்சங்கள், காரியம் கூடிவரும் அம்சங்கள், பண்பின் பகுதிகள், யோக அம்சங்கள், செயலுக்குரிய சட்டங்கள், அகந்தையை அணுகும் முறைகள், அகந்தையை விலக்கும் முறைகளை 10 முதல் 100 வரை எழுதலாம். அத்தனை அம்சங்களை ஒரே கதையின் மூலம் கூறுவது புரியும். எளிதல்ல.

வாய்ப்பு - பிரச்சினை
உலகம் விழிப்பானவர்க்கு வாய்ப்பு மட்டும் தரும்.
ஞானம் விழித்து செயல்படுவது வாய்ப்பு.

அஞ்ஞானம் ஆர்வமாக செயல்படுவது பிரச்சினை.
தானே வரும் சிறிய வாய்ப்பு வாழ்க்கை தருவது, பெரிய வாய்ப்பு அன்னை தருவது.
**வாய்ப்பைக் கண்ட மனிதன் தான் அதை அனுபவிப்பதை விட**
**அதனால் யாரை எப்படி அழிக்கலாம் எனத் துள்ளுவான்.**
வாய்ப்பை ஏற்றால் இருளான வாழ்வின் இதம் போய்விடும் என பயப்படுவான்.
தனக்கு வாய்ப்பு வருவதால் வாய்ப்பைத் தருபவன் சந்தோஷப்படக் கூடாது என்பது நாம்.
பிறர் கர்மத்தை அழிக்க வழி செய்யும்.
திறமைசாலி பெரு முயற்சி எடுத்து வெல்லும் கடைசி நேரம் கர்மம் அவனை ஏமாற்றும்.
தனக்கு வாய்ப்பு கொடுத்தவன் அதே வாய்ப்பால் பலன் பெற்று விடக்கூடாது என்ற
பரம்பரை உண்டு.
அனைத்தையும் இழந்தாலும் எவர் சொல்வதையும் ஏற்க மாட்டேன்.
உறவு, பிரியம், வயது, அந்தஸ்து, பழக்கம், பக்குவம் ஆகியவற்றைப்
பயன்படுத்தி வாய்ப்பை மறுப்பவன் மனிதன்.

நாம் செய்யும் வேலைகளை நாம் நினைவு வைத்திருப்போம். நாம் மறந்தாலும் சிலவற்றை மற்றவர் நினைவு வைத்திருப்பார்கள். **நாம் மறந்ததை பிறர் நினைவுடன் செயலுக்குரியதைத் தருவார்கள்.** ஒரு நண்பர் படிக்கப்போனபொழுது ரூபாய் 100 கேட்டார். அனுப்பினேன். நான் மறந்து விட்டேன். அடுத்த ஆண்டு அவர் வேலைக்கு வந்துவிட்டார். நான் படிக்கப் போனேன். என்னிடம் பணம் போதவில்லை. சில சமயம் அதிகப் பணம் வரும் சில சமயம் சிரமமிருக்கும். நண்பருக்குக் கொடுத்ததை மறந்து விட்டேன். எதிர்பாராத நேரம் அவரிடமிருந்து வந்த மணி ஆர்டர் ரூபாய் 100 உபயோகமாக இருந்தது. நாம் மறந்ததை வாழ்வு மறக்காது. நாம் சேவை செய்த துறை மறக்காது. **வாழ்க்கையைக் கடந்த அன்னையுண்டு.** மற்றவர்கள் பெற்றதைத் தருவார்கள். வாழ்வு செயலுக்குரிய பண்புடன் திரும்பத் தரும். 75 ரூபாயை ஒருவர் நாட்டுச் சேவைக்காக எடுத்துச் சென்றார். கஷ்டமான காலத்தில் சொல்லாமல் தியாகம் செய்ய வைத்தார். சிரமத்தை சிரமப்பட்டு சரி செய்ய வேண்டியதாயிற்று. நான்கு வருஷம் கழித்து கொடுத்தவர்க்கு உதவி தேவைப்படும் நேரம் வந்தது. ஆனால் கேட்கவில்லை. நான்கு ஆண்டிற்கு முன் பெற்றவர் நான்கு மடங்கு கேட்காமல் திருப்பக் கொடுத்தார். நான்கு ஆண்டிற்கு முன் சிரமமான நேரத்தில் இலட்சியமான வேலைக்குப் போன பணம் நான்கு மடங்காக கேட்காமல் முக்கிய நேரம் திரும்ப வந்தது. வாழ்வு மறக்காது. **வாங்கியதைத் தராது. தர முடிந்ததைத் தரும்.** அரிசி வாங்க கடன் பெற்ற இரண்டு ரூபாயைத் தராவிட்டால் இருநூறு முறை இரண்டு ரூபாய் அரிசி வாங்கவே தர வேண்டும் என்பது வாழ்வின் சட்டம். நாம் மறந்தாலும் நம் மனம், ஆழ்மனம், பிறர், வாழ்வு, உலகம், அன்னை மறக்கமாட்டார்கள். அது நல்ல செயலுக்கும், கெட்ட செயலுக்கும் பொது. **வாய்ப்பு எது, ஏன் வந்தது, எப்படி வந்தது, யார் மூலம் வந்தது, என்ன செய்தது, எந்த சட்டப்படி செயல்பட்டது என்பவற்றை கண்டு** கணக்கில் சேர்த்துக் கொண்டால் அதன் முடிவு தெரியும். ஒரு பலன் எழும்பொழுது நாம் பலனை மட்டும் கருதி மற்றவற்றைக் கருதுவதில்லை. கருதினால் நாம் செய்த நல்லதற்கு மட்டும் நல்ல காரணம் கண்டுபிடிக்க முயலுவோம். உண்மையைக் காண எளிதில் முடியாது. என்றாலும் பல்வேறு கோணங்களில் முடிந்தவரை பல காரணகாரியங்களை பல்வேறு சட்டப்படி கண்டுகொள்ள முயன்றால் ஓரளவு அதிகமாகப் புரியும். ஒருவருக்கு முழுவதும் புரிந்தால், அவர் வாழ்வில் பெரிய திருப்பம் எழும். மேரி குழந்தை. அவளுக்கு பெரிய சொத்தும், பெரிய வருமானமும், மிகப்பெரிய அந்தஸ்தும் வருகின்றன. அவள் தன்னை மறந்தாள். **பணம் பெற்றதால் அடக்கம் போய்விட்டது என்ற குறை எழும் சுபாவம் அவளுடையதல்ல.** எதை நினைக்க வேண்டும் எதை நினைக்கக்கூடாது என்ற எண்ணம் எதுவும் அவளுக்கு எழவில்லை. அவள் மனக்குறை, மனக்கவலை அற்புதமாக விலகியது.

அவளுக்கிருந்த நிதானமும் பிரான்ங்க்கிற்கில்லை. டாக்டர் இரவு பகலாய் சேவை செய்து ஒரு நாளைக்கு அரை பவுன் சம்பாதிக்கிறார். ஊண்உறக்கமின்றி உழைக்கிறார். மேரியின் நிலைமை மாறியபின் நாள் சென்றும் அவளுக்கு டாக்டர் ஏன் இப்படி உழைக்க வேண்டும், ஏன் அவருக்கு £1000 ஆண்டு வருமானம் தரக்கூடாது என்று தோன்றவில்லை. அவர் தொழிலை நிறுத்திவிட வேண்டும் என்று மட்டும் நினைக்கிறாள். அவரிடம் கூறுகிறாள். அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. பெற்றோர் இடைவிடாமல் பிள்ளைகள் நலம் கருதுவார்கள். பிள்ளைகட்கு பெற்றோர் நினைவு வருவதேயில்லை. தேவைப்படும்பொழுது மட்டும் நினைவு வரும். இது பெரிய குறையாகத் தோன்றும். இயல்பு என்பதால் அங்கு குறைப்பட எதுவுமில்லை. மேரி £1000 அல்லது £500 பவுன் சித்தப்பாவுக்கு கொடுத்தால் அவர் வருஷம் முழுவதும் உழைத்து £150 சம்பாதிக்கத் தேவையில்லை. கதையில் எந்தக்கட்டத்திலும் மேரிக்கு அப்படித் தோன்றவேயில்லை. அது வினோதமாகத் தோன்றிற்று. கதையின் போக்கை ஊன்றி மேற்கூறியவற்றை மனதில் கொண்டு பார்த்தால் வேறொரு பெரிய நிகழ்ச்சி தன்னை வலியுறுத்துவதைக் காணலாம். மேரி தன் வருமானத்தில் சிறுபகுதி டாக்டருக்கு கொடுத்திருந்தால் கதையின் பின்நிகழ்ச்சி ஏற்பட்டிருக்காது. டன்ஸ்டபிளை பலரும் மணக்க விரும்பினாலும் பணத்திற்காக அவளை நாடுபவரை அவள் ஏற்க மறுக்கிறாள். அவள் **கண்ணில் பணத்தைப் பொருட்படுத்தாமலிருப்பவராக டாக்டர் தார்ன் மட்டுமே படுகிறார்.** அவரிடம் பிரியம் விழுகிறது. அவரைத் தவறாமல் தன் விழாக்களுக்கு அழைக்கிறாள். அவருக்கு இலண்டன் வாழ்வு பிடிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் வற்புறுத்தி வரச்சொல்கிறாள். அவருக்கு வயது 50 அவளுக்கு வயது 40. எவர் கண்ணிலும் டாக்டரோ, அவர் மீது இவளுக்குள்ள அக்கறையோ படவில்லை. மேரியின் கண்ணிலும், மனதிலும் படுகிறது. அதில் உண்மையுண்டு. பெரும்பாடுபட்டு இருவர் மனத்தையும் அறிந்து திருமணம் செய்து வைக்கிறாள். டாக்டர் மேரியை வளர்த்தது பெரியது. அவர் பணத்தைப் பற்றி நினைக்கவில்லை. அவர் மூலம், அவருடைய பெருந்தன்மையான செயல்கள் மூலம் அவருடைய (values) பண்புகள் மூலம் மேரி பெற்றது பெரியது. ரோஜர் மேரிக்கு £10,000 அல்லது £20,000 தரப் பிரியப்பட்டான். டாக்டர் அவனைப் பேசவே விடவில்லை. ரோஜர் மகன் மேரியை மணக்க விரும்பினான். டாக்டர் இடம் தரவில்லை. மேரிக்கு அது தெரியாது. நேரடியாக அவளையே லூயி – ரோஜர் மகன் – கேட்டபின்னும் மேரிக்கு அந்நிகழ்ச்சி நினைவிலில்லை. மேரியின் குறையாகவோ, தவறாகவோ அது இருக்கும். டாக்டர் மேரிக்கு செய்ததை கடமையாகக் கருதவில்லை. கடமையைக் கடந்த பெரிய இயல்பான செயலாகக் கொண்டார். மேரிக்கு எதுவும் விளங்கவில்லை. Frank மட்டும் மனத்திலிருக்கிறது. வாழ்வு கவனிக்கிறது. அது தன் கடமையை செய்யத் தவறாது. செய்யும்பொழுது வாழ்க்கை செயலுக்கும் செயல் நேர்ந்த வகைக்கும், வாழ்க்கைக்கும் பொருத்தமாக அளவிலும், அம்சத்திலும் செயல்படுகிறது. டன்ஸ்டபிள் பணம் டாக்டருக்கு வருகிறது. இதை அங்கு எவரும் எதிர்பார்க்கவில்லை. **குதர்க்கவாதிகட்கு மட்டும் குதர்க்கமாகத் குயுக்தியாக தோன்றி மறைந்த எண்ணமிது.** டாக்டருக்கு வந்த பணம் பணமாக ரொக்கமாக வரவில்லை. அனுபவிக்கும் பெரிய எஸ்டேட்டாக வருகிறது. பணம் அந்தஸ்தில்லாதது. பணம் சொத்துடன் வரும்பொழுது இல்லாத அந்தஸ்து வந்து விடுகிறது. பழம்பெரும் குடும்பமான உல்லாத்தார்ன் அண்ணனும் தங்கையும் அவருடன் வந்து சேர்ந்து கொள்கிறார்கள். அது பணம், எஸ்டேட்டை விடப் பெரியது.

உலகம் வளர்வது உலக மாந்தர் அனைவருக்கும் எழும் சமூக வாய்ப்பு. பிரான்சில் புரட்சி எழுந்தது பிங்கிலிக்கு டார்சியின் நட்பு வாய்ப்பாயிற்று. பிரான்சில் பிரபுக்களின் தலை உருளுவதால் இங்கிலாந்தில் அதைத் தவிர்க்க பிரபுக்கள் மனம் மாறி புதிய **பணக்காரர்களுடன் அதிகமாக நெருங்கிப் பழகினர்.** அந்த வாய்ப்பு பிங்கிலி போன்றவர்க்கு அதற்கு முன்னில்லை. தமிழை ஆதரிக்கும் அரசியல் கட்சி பதவிக்கு வந்தது தமிழாசிரியர்கட்கெல்லாம் ஓர் புதிய வாய்ப்பு, தமிழ்

பிரசுரங்கட்கு வெளியிடும் வாய்ப்பு எழுந்தது. தமிழுக்கு மேடையிலும், கல்வித்துறையிலும், கற்பனைக்கெட்டாத அளவு வாய்ப்பு மரியாதையாக, ஊதிய உயர்வாக எழுந்தது. Dr.தார்ன் குடும்பம் 800 ஆண்டுகளாக பிரபுவின் குடும்பமானாலும், பணமில்லை. அண்ணன் கூலிக்காரர்களுடன் அன்பாகப் பழகுவது உல்லாத்தார்ன் போன்ற உயர்ந்த குடும்பங்களை தார்னிடமிருந்து விலக்கியது. **வாழ்வில் ஒரு காரியம் வலுவாக நிகழ்ந்தால் எதிரான காரியத்திற்கு அது வாய்ப்பு.** உல்லாத்தார்ன் பிரம்மச்சாரி, அவர் சகோதரி பிரம்மச்சாரிணி. குடும்ப பரம்பரையும், செல்வமும், அந்தஸ்தும் ஈடுஇணையற்றது. ஹென்ரியின் பழக்கத்தைக் கண்டிக்க அவர்கள் ஹென்ரியை ஒதுக்கினார்கள். **அதன் நேரடியான பெரிய விளைவு**

**Dr. தார்ன் தன் பிரபுத்துவ பண்பை மேலும் வலுவாக உயர்த்தினார்.** அண்ணனை விலக்கும் இடத்திற்குத் தான் போக மறுத்தார். அண்ணன் மேரிக்கு திருமண வாக்குக் கொடுத்தார். கொடுத்தவர் பொறுமையிழந்தார். பெண் கர்ப்பமானாள். உலகம் கொதித்தெழுந்தது. ஹென்ரி நிலைமையை சீர் செய்ய மேரியைத் திருமணம் செய்திருக்கலாம். கூடாது என்று அவர் நினைக்கவில்லை. **ஓர் பிரபு எளிய பெண்ணிடம் இது போல் நடப்பது எவரும் செய்வது, அவளைத் திருமணம் செய்வதும் உண்டு, ஆனால் அரிது.** ஹென்ரிக்கு எந்த கெட்ட எண்ணமுமில்லை. நடைமுறை யதார்த்தம் என்னவென்றால் கர்ப்பமாவதில் உள்ள அவசரம் உற்சாகமாகி செயல்படும், திருமணம் எண்ணமாக உதித்து உலகத்தை நேரடியாக எதிர்த்து செயல்பட வேண்டியதில் உற்சாகத்திற்கிடமில்லை. உறுதிக்கு இடம் உண்டு. **வாழ்வின் பெரிய அம்சங்கள் சிருஷ்டியின் பெரிய அம்சங்கள்.** வாழ்வு செயல்படும்பொழுது நிதானமாகப் பொறுமையாக செயல்படாது. அதுவும் அதன் பெரும் பரிசுகளை வழங்க முடிவு செய்து விட்டால் உடனே செய்யும். வாழ்வின் வேகத்திற்கும் ஹென்ரியின் பொறுமைக்கும் ஒத்து வராது. ரோஜரின் ரோஷம் ஒத்து வரும். ரோஜர் ஹென்ரியை தேடிப் போனான். ஹென்ரி வீட்டில் அமைதியாக நின்று அன்பாக அவனை வரவேற்றார். அமைதி அழிவைத் தந்தது. **அழிவை அமைதியாக ஏற்பது பெரும் செயல்.** அமைதி நாளை வரப்போகும் அதிர்ஷ்டத்தைக் காட்டுகிறது. Dr. தார்ன் உல்லாத்தார்ன் மீது கொண்ட எரிச்சல் ரோஜரின் கோபமாக மாறி ஹென்ரியை அழித்தது. டாக்டருக்கு எழுந்த கொதிப்பு உள்ளது. **உண்மையை அறிந்து மனம் மாறியது அரிது,** அரிய மனமாற்றம் அற்புதம் பிறகு நிகழ்வதை முன்கூட்டிக் காட்டுகிறது. ரோஜர் திறமையும், செல்வமும் செல்வாக்கும் உயர்ந்த வேகம், உயர்ந்த பாணி, ரோஜர் கோபம் எழுந்ததின் பிரதிபலிப்பு. மேலும் டாக்டரின் மனமாற்றம் எழுந்த அற்புதம் அதனுள் அடங்கியுள்ளது. **டாக்டரின் மனமாற்றம், ரோஜர் செல்வம், மேரியின் கல்வி, குணம், பண்பு, ரோஜர் மகன் லூயியின் பழக்கம் ஆகியவை வளர்ந்த விதம் வேகம் வாழ்வின் பெரு ஓட்டம் முழு ஓட்டமாக எதிரெதிராக உடனுறையும் ஓட்டமாகச் செல்வது வாழ்வின் பெருமை,** ஆசிரியர் எழுத்தின் உயர்வு. வாய்ப்பு எது, எவருக்கு வாய்ப்பு, எந்த வாயிலாக வருகிறது, எந்த அளவில் வருகிறது, எப்படி ஒருவர் வாய்ப்பு அடுத்தவர்க்குப் பிரச்சினையாகிறது, **எப்படி வாய்ப்பும் பிரச்சினையும் ஒன்று என்பதை கதையின் கரு காட்டுவதால்** இது போன்ற இலக்கியம் பேரிலக்கியம். இந்திய ஆன்மீக மரபின் ஞானத்தை அறிவதைப் போல் அஞ்ஞானத்தையும் அறிவார்கள். இரண்டிற்கும் முழுமையுண்டு என்று கருதினார்கள். அது மனம் பெற்ற திருஷ்டி. பகவான் சத்திய ஜீவிய திருஷ்டி பெற்றிருப்பதால் ஞானம் அஞ்ஞானத்தின் உண்மையைக் கண்டார். அஞ்ஞானம் ஞானத்தால் உற்பத்தி செய்யப்பட்டது எனக் கண்டார். எந்த பேரிலக்கியமும் எந்த பெரிய ஆன்மீக தத்துவத்தை விளக்க வல்லது. *Pride and Prejudice*இல் எலிசபெத்தின் சுடர் விடும் அறிவு கண்களில் மின்னலாகத் தெரிகிறது. அது டார்சிக்குத் தெரிகிறது. போட்டியிடும் காரலினுக்குப் போட்டி பொறாமையை எழுப்புகிறது. சுடர் தெரியவில்லை. பெண் தாயாருடைய ஜீவியமான பொய்யில் பிறந்தவள். தகப்பனார் அறிவு அவளுக்கு மனத்தில் அளித்த விடுதலை உள்ளத்தில் அளிக்கப்படவில்லை. அவள் மனம் பொய்யின் பொலிவான அழகன் முகத்தை

நாடுகிறது. அவன் செய்திகள் பொய்யானவை. அவை அவளுக்கு இதமான மெய்யாகத் தோன்றுகின்றன. பொய்யின் காலம் முடிந்து குட்டு வெளிப்படுகிறது. மனம் மாறி அவள் கவர்ச்சியிலிருந்து விடுபடுகிறாள். இதயம் என்றும் போலிருப்பதால் not unwelcome என அவனை வரவேற்கிறாள் – தெளிந்த அறிவும் தெளிவற்ற உணர்வும் போராடுவதை அவள் தன்னுள் காண்கிறாள். முடிவாக விக்காம் விலகி பிங்கிலி வருகிறான். அதைத் தொடர்ந்து டார்சி வருவதற்குள் காலின்ஸூம், லேடி காதரீனும் அவள் தாயாரின் பிரதிபலிப்பாக வருகிறார்கள். பெண் அறிவால் விடுதலை பெற்றாள். உணர்வில் அவளுக்கு அவ்விடுதலை கிடைக்கவில்லை. அவனைக் காண மனம் ஏங்கி தகப்பனாரின் அனுமதி கேட்கிறாள்.

**Dr. தார்ன் aristocratic gentleman** பிரபுத்துவ உயர்குடி மனிதன், Gentleman என்பதை சான்றோர் எனலாம். நல்ல மனிதன் எனக் கூறலாம், இதமான பெரிய மனிதன் எனவும் கூறலாம். **பிறர் இனிக்க வாழ்பவன் என்றால்** இவையனைத்தும் அதனுள் அடங்கும். பிறர் இனிக்க வாழ்பவனை நோக்கி வாய்ப்புகள் வந்தபடியிருக்கும். இது வாய்ப்பின் தன்மை. பணம் பணக்காரனைப் போய்ச் சேரும். தெளிவான விஷயம் தேடுபவர்க்குக் கிட்டாது. தேவையற்றவரை அது நாடும். எந்த வட்டிக்கடைக்காரனும் இல்லாதவனுக்கு உதவ முன் வரமாட்டான். பணம் உள்ளவனுக்கு தயாராக உதவுவான். உலகத்துப் பணம் முழுவதும் அமெரிக்காவிற்கு கடனாக, டெப்பாசிட்டாக அளிக்கப்பட்டுள்ளது. **வாழ்க்கை பெற்ற வெற்றியை நோக்கி வாய்ப்பு நகரும்.** சவ்வூடு பரவுதல் என்ற தத்துவம் ஜடத்திற்குண்டு. அதே தத்துவம் வாய்ப்புக்கும் உண்டு. நாம் பொதுவாக வாய்ப்பை அறிவதில்லை. எதிரிலிருந்தாலும் கண்ணில் படுவதில்லை. **மனித வாழ்வில் மிகப் பெரிய ஆன்மீக வாய்ப்பை சமூகம் அவனுக்குத் தருகிறது.** சர்வதேச அகாடமியின் தலைவர் சிந்தனையாளர். அவர் உலகுக்குக் கூறியது: எண்ணத்தை மனத்திலிருந்து எடுத்தால் குறையாது – கொள்ளத்தான் குறையாது. மனமும் அறிவும் வளர எண்ணம் பிறருக்குக் கொடுக்கப்பட வேண்டும். **ஒருவர் கருத்தை அடுத்தவர் ஒருவரோ, பலரோ ஏற்றால் அவர் கருத்து வளரும்.** இது மனம் பற்றிய உண்மை. ஆன்மா இதைக் கடந்தது. ஒருவர் தன் ஆன்மாவைப் பிறருக்கு அர்ப்பணம் செய்தால் அவர் ஆன்மா வளரும். **ஆன்மா வளர்வது வாழ்க்கை அபரிமிதமாக வளர்வது.** அது அதிர்ஷ்டம். பேர் அதிர்ஷ்டம் பெற அனைவருக்கும் உள்ள வாய்ப்பு இது. இது மனிதன் கண்ணில் படுவதில்லை. தன் இலட்சியத்தை ஒருவர் நான்கு சுவர்கட்குள் வளர்க்கிறார். **உள்ள வாய்ப்பை அறிவது அருள்.** பிறர் இனிக்க வாழ்பவன் பெரிய மனிதன். பிறர் தவறு எதுவானாலும், துரோகம் எதுவானாலும், அவரைக் குறையாக நினைக்கக்கூடாது. அப்படி அவனால் பேச முடியாது. அப்படிப்பட்ட மனிதனுக்கு ஒருவர் ஊறு செய்தால் **அந்த நிலையிலும் தான் நிதானத்தை இழக்கவில்லை** என்ற வாய்ப்பாக அதை கருதுகிறான். அண்ணன் மகளுக்கு பெரும் சொத்து உயில் மூலம் தன் கையால் வரும் நேரம் வந்ததை தார்ன் எப்படிக் கருதுகிறார்: இதுவும் என் ஆசையைக் கிளறவில்லை, இங்கும் நான் நிதானத்தை இழக்கவில்லை என்பதற்கு இது ஒரு **வாய்ப்பு எனக் கொள்கிறார்.** பிறர் இனிக்க வாழ்பவனுக்கு (gentleman) எதுவும் பிறரை மகிழவைக்கும் வாய்ப்பாகும். **பிறர் இனிக்க வாழ்பவன் இதயம் எப்பொழுதும் இனிமையாக இருக்கும்.** செயல் எனில் அவ்வினிமையை உயர்த்துவதாகும். எதிரே வந்தவரை எப்படி இனிக்கச் செய்யலாம் எனில் இதயம் அடுத்தகட்ட இனிமையைத் தொட வேண்டும். மனம் செயலைவிட உயர்ந்தது. மனம் செயலை நிர்ணயிக்கும். மனம் செயலின் கருவை மாற்ற வல்லது. Dr. தார்ன் மனிதன். அண்ணன் கொலை செய்யப்பட்டான் என்றவுடன் மனித இரத்தம் கொதிக்கிறது. மேலும் Dr. தார்ன் gentleman. அவர் கொள்கை, இலட்சியம் தன் செயலால் பிறர் இனிமையை அனுபவிக்க வேண்டும். நிலைமை குற்றம், கொலை. கொலை செய்யப்பட்டது உடன் பிறந்தவன். கொலை செய்தவன் அண்ணனுடைய அத்யந்த நண்பன். **ரத்தம் கொதிக்கிறது, ஆத்திரம் அடங்கக்கூடியதில்லை.** கொலை செய்தவனை கொலை செய்வது தர்மம், நியாயம், கையும் காலும்

கட்டிழந்து துடிக்கின்றன. இது சுபாவம், சரி, உலகத்திற்குரியது. தார்னுடைய கொள்கை இலட்சியமானது, இலட்சியம் எனில் சில இடங்கட்குப் பொருந்தும், சில இடங்கட்குப் பொருந்தாது என்றிருக்காது. **எல்லா நிலைகளிலும் பொருந்துவதே இலட்சியம்.** இலட்சியம் செயலைப் பொருத்ததில்லை, செயலுக்கு அடிப்படையான எண்ணத்தைப் பொருத்தது. எண்ணம் மனத்தில் உதித்தால் அதில் முரண்பாடிருக்கலாம். **ஆத்மா முரண்பாட்டை அறியாதது, அனுமதிக்காதது.** ஆத்மாவில் எழும் எண்ணம் இலட்சியமானால் அது எங்கும் பொருந்த வேண்டும். Dr. தார்ன் துடிக்கும் அங்கங்களுடன் தான் gentleman தன் இலட்சியம் பிறர் இனிக்கச் செயல்படுவது. இங்கு என் அண்ணனைக் கொலை செய்தவனைக் கொலை செய்ய என் மனமும் செயலும் அங்கமும் ரத்தமும் துடிக்கும்பொழுது நான் எப்படி கொலைகாரன் இனிக்க நடக்க முடியும்? என்று இலட்சிய சிந்தனை செய்தார். **எண்ணம் செயலை விட வலிமையானது.** அவரது இலட்சியமான எண்ணம் அவர் செய்ய இருக்கும் பழிவாங்கும் செயலை மாற்றியது. மனத்தின் செயல் மாறியவுடன் புறத்தில் செயல் புது விவரம் தருகிறது. குற்றம் செய்தவர் ரோஜரில்லை, அண்ணன் என்பது வெளிவருகிறது. அது ஓர் பெண்ணை கர்ப்பவதியாக்கிய குற்றம். அவளுக்கு திருமண வாக்கு கொடுத்து நடைமுறையில் கர்ப்பத்தை வழங்கினார். மேலும் சிலர் அவளுக்கு போதை மருந்து கொடுத்து மயக்கமாக்கினார் என்றனர். அதன் உண்மை தெரியவில்லை, தெரிந்து கொள்ளும் மனநிலையில் சூழலில்லை. மனம் மாறியது உண்மை. குற்றம் இடம் மாறியது. இது கற்பனையாலும், மனம் சிதறும் நிலை. இந்த நேரம் Dr. தார்ன் போல யார் நடந்திருப்பார்கள், எத்தனை பேர் நடந்திருப்பார்கள் என்பதை நமக்கு எவர் சொல்லப் போகிறார்கள். **ரோஜர் மனம் இனிக்க அவர் முடிவு செய்து நடந்தார்.** உயில் எழுதிய பின் ரோஜர் செயலும், உயிலும், டாக்டர் மனம் இனிக்கும்படி வாழ்வு பூர்த்தி செய்தது. **உலகில் வாய்ப்பு தவிர வேறு எதுவுமில்லை.**

**இது இனிமையான சிருஷ்டி,** உலகம் நகைமுகம் கொண்டது. இறைவன் தன் புதிய பெரிய ஆனந்தத்திற்காக சிருஷ்டித்தான். சிருஷ்டியின் முடிவு மோட்சம் என மரபு கருதுவது ஆரம்பமே முடிவு எனக் கொள்வதாகும். **மோட்சத் தகுதி பெற்ற ஆத்மா செய்ய வேண்டியதைச் செய்தவர் புத்தர், விவேகானந்தர்.** மோட்சம் சித்தித்தால் முதற்கடமையாக அதை மறுக்க வேண்டும். மோட்சம் என்பது அகம் பெற்ற சித்தி. உலகம் புறத்திலுள்ளது. மோட்சத்தை ஏற்றால் அகம் அகத்தில் பூர்த்தியாகும். மோட்சத்தை மறுத்தால் அகம் விரிந்து புறத்தை உட்கொள்ளும். மோட்சம் பெற ஆத்மா அகத்துள் சமாதியை எட்டியது. மோட்சத்தை மறுத்த ஆத்மா புறத்தில் உலகை தன்னுட்கொண்டு சித்தி பெற விழைகிறது. அதை பகவான் விழிப்பில் சமாதி என்கிறார். விழிப்பில் சமாதி பெற்றவன் பார்வை ஆண்டவன் திருஷ்டி. அத்திருஷ்டிக்கு உலகில் தீமையில்லை, உலகில் பிரச்சினையில்லை, அத்திருஷ்டியை பகுதியான மனத்தின் பார்வையாக்கினால், வாய்ப்பு பிரச்சினையாகும். **Dr. தார்ன், ஹென்றி தார்ன், மேரி, ரோஜர் அன்றிருந்த நிலையில் வாழ்வு மேரியின் பெண்ணுக்கு £300,000 செல்வம் வழங்க முடிவு செய்தது.** அது மேரியின் பெண்ணுக்குரியது, மேரிக்கல்ல, அது ஹென்றிக்குப் போகாது, தார்னுக்குப் போகும், அதுவும் தார்ன் அதை மேரிக்குப் பெற்றுத் தந்தபின் போகும். அதை சம்பாதிக்கக்கூடிய திறமை தார்னுக்கோ, அவர் அண்ணன் ஹென்றிக்கோ இல்லை, ரோஜருக்குண்டு. ரோஜருக்கு அத்திறமை செல்வமாக அவன் எனர்ஜி ஆயிரம் மடங்கு பெருக அவன் திறமை ஆயிரம் மடங்கு வாழ்வில் செயல்பட வேண்டும். **அதை செயல்பட வைப்பது விஸ்கி.** அந்த அளவு குடிக்கும் சந்தர்ப்பம் எழ அவனுக்கு பெரிய துரோகம் செய்ய வேண்டும். மேரியின் அழகு ரோஜரின் திறமைக்கு செய்யும் துரோகம் அவள் கருவுருவது. அவள் கருவுற்ற செய்தி, அதை சாதித்த ஏமாற்று வித்தை ரோஜரின் ஆத்திரத்தை கிளப்பியது. அன்னோன்யமான நண்பன் பிரபுவானால், அவனது விஸ்வாசம் துரோகமாக வெளிப்படும். வெளிப்படும் துரோகத்திற்கு புயல் வேகமுண்டு, பூகம்ப சக்தியுண்டு. மனித வாழ்வுக்கு அதுவும் சமூக வாழ்வுக்கு அது எதிரி. அக்கோபம் சமூகத்தை அழிக்கவல்லது.

**அமெரிக்காவில் மலரும் புது வாழ்வு ஐரோப்பிய சமூகத்தை அழிக்கும்**. மேரியை மணந்தவன் இங்கிலாந்திலிருக்க முடியவில்லை. அமெரிக்காவிற்கு அவனை அழைத்துப் போனான். **போனவன் மேரி பெற்ற செல்வத்தை எடுத்துப் போக விரும்பவில்லை**. அது மேரிக்குரியது, மேரியின் பெண்ணுக்கும், டாக்டர் தார்னுக்கும் உரியது. அது உலகில் தலைகாட்ட முடியவில்லை. தலைமறைவாக தார்ன் மேரியை இலண்டனில் 12 வருஷம் வளர்க்கிறார். அவள் செல்வம் **அப்பன்னிரண்டாண்டுகளில் நாளொரு பவுனும் பொழுதொரு ஷில்லிங்காக வளர்கிறது.** அச்செல்வத்திற்குரியவன் ரோஜர் மகன் லூயி. அவன் அச்செல்வத்திற்குரிய தகுதியைப் பெற முயலவில்லை. அதை முழுவதும் உடனே அனுபவிக்கும் உரிமையை நாடுகிறான். நாடியதை முழுமையாக ருசியாலும், அதிகாரத்தாலும், இல்லாத உரிமையாலும் அனுபவித்துத் தீர்க்கிறான். அவனுக்கு அதைப் பெற்றுத்தரும் டாக்டரை விலக்கி, அதை அழிக்கும் டாக்டரை அழைக்கிறான். **அந்த வாய்ப்பு பெரிய வீட்டின் எதிர்ப்பாய் உருவாகிறது.** அரபெல்லா டாக்டரிலும், மேரியிலும் தன் அதிகாரத்தை நிலைநிறுத்துகிறாள். பிரான்ங்கிடம் அவள் ஜபம் செல்லவில்லை. மொபட்டிடம் அது செல்லவில்லை. டன்ஸ்டபிளிடமும் பலிக்கவில்லை. மேரி மனம் புழுங்கினாலும் கொடுமை செய்பவர்களை வெறுக்கவில்லை. எதிர்த்துப் பேசவில்லை. தார்ன் பொறுமையைக் கடைப்பிடிப்பதுடன் கிரஷாம் கூப்பிட்டபொழுது போகிறார். அரபெல்லா மனம் மாறாமல் வேதனைக்காக அழைத்தபொழுது தயங்காமல் போகிறார். போகிறவர் ஆதாயத்திற்காகப் போகவில்லை. அந்தஸ்த்தின் முறைக்காகப் போகிறார். லூயி தன் சட்டபூர்வமான உரிமையை குடியால் இழந்தபொழுது, மேரியைத் தன் வீட்டில் கண்டு அவள் மீது ஆசைப்படுகிறான். ஆசையை வெளியிடுகிறான். அவன் தன் பெரும் சொத்தை நினைக்கிறான். அவள் எதையும் நினைக்கவில்லை. அவன் proposal அவள் காதையே எட்டவில்லை. அவள் அகவுணர்விலிருந்து அசையவில்லை. மேரியின் மனம் புழுங்குவதால் மனம் தெளிவுபடுகிறது. அரபெல்லா போல் அவள் குறுக்குவழியை நாடவில்லை. கிரஷாம் இத்திருமணம் நடக்கக்கூடியதல்ல என்ற தெளிவு பெற்றவர். இது வாய்ப்பு என்று அறிய முடியாதவர். அதனால் அறிவுக்குரிய முறையை நாடி டாக்டர் ஒத்துழைப்பைக் கேட்கிறார். டாக்டருக்கு உலகம் அறியாத உண்மை தெளிவாகத் தெரிகிறது. லூயி இனி பிழைக்க முடியாது. பிழைக்கும் வழியை விட்டும் அதைத் தரும் டாக்டரை விட்டும் லூயி விலகிப் போகிறான். **இது சூட்சுமம்**. கிரஷாமுக்கு அந்த சூட்சுமம் புரியும் நிலையில்லை. அறிவுக்குரிய முறையை மறுத்தால் கிரஷாம் டாக்டருக்கு அறிவில்லை என மட்டும் கருத மாட்டார். **டாக்டருக்கு ஆசை வந்து விட்டதாகக் கருதுவார்**. டாக்டர் நேர்மையை ஏற்பவர் கிரஷாம் ஒருவரே. டாக்டர் மறுப்பு கிரஷாமையும் விலக்கும். கடைசி துளி விலகும் வரை பழைய மனப்பான்மை செயல்படக் கூடியது. அரைமணி முன்னதாக ஆகஸ்ட் 15, 1947 வந்தாலும் அது ஒரு கோடி உயிரை சாப்பிட வல்லது. சுதந்திரத்தையும் அழிக்கவல்லது. அதன் சூட்சுமச் சின்னமாக ஆசிரம சாதகர் ஆசிரம வாயிலில் கொல்லப்பட்டு அந்த தொந்தரவுக்கு exclusive உயிர் கொடுக்கும். டாக்டருக்கு அது தெரியாது. ஏதோ ஒன்று ஆழத்தில் டாக்டருக்கு அதை உணர்த்தியது. **டாக்டர் சொல்லிய பதிலை டாக்டரே நேரில் கூறிய பிறகும் கிரஷாம் நம்ப மறுக்கிறார்.** டாக்டர் நேர்மைக்குப் பேர்போனவர். நேர்மை பழைய நிலைக்கு வேலை செய்தால் – கிரஹாம் கூறுவதை ஏற்றால் – வாழ்வின் சட்டம் திட்டமாகாது. மேரியின் உள்ளுணர்வு வேலை செய்வது அன்பு மூலம். டாக்டரின் உள்ளுணர்வு வேலை செய்வது நேர்மை மூலம். நாம் கவனிக்க வேண்டியது வாழ்வின் சட்டம் ஆரம்பித்த இடம், அதன் முறை, அது வளர்ந்த வகை, அனைவரிலும் எதிரெதிரான வகைகளிலும் **மனித செயல்கள் வாழ்வின் போக்கான நிகழ்ச்சிகள் மூலம் வாழ்வைப் பூர்த்தி செய்வதை நாம் காண்பது அவசியம்.**

அனுபவம், அறிவு என இரண்டுண்டு. அறிவு பெற்று சாதித்தால் அனுபவம் வரும் என்று நாம் நினைக்கலாம். **நடைமுறையில் அனுபவம் முன்னும் அறிவு பின்னும் வரும்.** ஒருவர் அனுபவம்

அவர் சாதிக்க உதவும். எப்படி சாதித்தீர்கள் எனக் கேட்டால், ஏதோ செய்தேன், தானே நடந்தது, கூடி வந்தது, எப்படி எனத் தெரியவில்லை என்பது பொதுவாகக் கூறுவது. நாள் கழித்து அனுபவம் மனதில் ஊறி அறிவாக மாறி மேல் எழுந்து வந்தால் எப்படி செய்தோம் என அறியலாம். டாக்டர் தார்ன் தன் அண்ணன் பெண்ணுக்கு பெரும் சொத்து எப்படிப் பெற்றார் என அவர் அறியார். மேரிக்கு எப்படி பிரான்ங்க் கணவனாக அமைந்தான் என அறியாள். திருமணத்தின் பொழுது கிரஷாம் வீட்டில் விருந்து வைக்கலாம் என்று பேசியபொழுது மேரியைக் கேட்டனர். டாக்டர் வீட்டில் இடமில்லை. உங்கள் வீடு தான் வசதியானது என்றாள். டாக்டர் ஆட்சேபிக்க மாட்டாரா என்று கேட்டபொழுது **மேரி "அவருக்கு அப்படியொரு விஷயம் நடந்ததாகவே தெரியாது"** என்றாள். டாக்டர் முக்கியமான விஷயங்களில் விழிப்பாக இருப்பார். இதர விஷயங்களைப் பொருட்படுத்தமாட்டார். தான் எப்படி இக்காரியத்தை சாதித்தார் என அவர் அறிய வழியில்லை. அவர் யோசனைக்குப் புலப்படாத விஷயம் அது. எவர் சிந்தனையையும் மீறும் செயல் இந்த விஷயம். நடைமுறையென்ன? **நடந்த விஷயம் பிற்காலத்தில் புரியும், அல்லது அடுத்த ஜன்மத்தில் புரியும்**. அதற்கு முன் சிறிதளவு புரிந்தால் செயல் உருவாகும். Sub Conscious opportunity ஆழ்மன வாய்ப்பு அது. அதுவே அதற்குரிய பலனைத் தரும். அதுதான் வாழ்வு செயல்படும் வகையென்பது. டன்ஸ்டபிள் டாக்டர் மீது பிரியம் கொண்ட உண்மை எவருக்கும் தெரியவில்லை. அது மேரி கண்ணில்படுவது மேரிக்கு நடந்த விஷயம் எப்படி முடிந்தது எனப் புரிவதாகும். மேரி டாக்டரிடம் அவர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறியபொழுது அதை சட்டை செய்யாமல் புறக்கணிக்காமல் அவர் கேட்டுக்கொண்டது அவருக்கு நடந்தது எப்படியெனப் புரிவதாக அர்த்தம். **டாக்டருடைய அனுபவம் ரோஜர் உயில். அது கடமையாக நிறைவேற்றப்பட்டது.** லூயி உயிரைக் காப்பாற்ற அவர் முனைந்தது தொழில் தர்மம். தோற்றது மனித சுபாவம். உயில் கடமை. உயிலால் சொத்து மேரிக்கு வந்து கிரஷாம், பிரான்ங்க், அரபெல்லா மனம் மாறி மேரியை பிரான்ங்க் மணந்தது சமூக தர்மம் – பணத்தின் முக்கியத்துவம். உலகை இப்படிப் புரிந்து கொள்வது உலகத்திற்கு உண்மை. வாழ்வின் சட்டம் என்பது ஊரையும், உலகையும் கடந்தது. இயற்கை என்பது கடவுள் மறைபொருளாக செயல்படுவது. இயற்கை ஜடம் மூலம் வாழ்வில் செயல்பட மனத்தின் மீது தன் ஆதிக்கத்தை செலுத்துகிறது. சமூகத்திலுள்ள மனிதனுக்குத் தன்னைத் தெரியும். சமூகத்தின் முக்கியத்துவம் தெரியும். **டாக்டர் கடமையை உயிலில் செய்தாலும், லூயி உயிரை டாக்டராகக் காப்பாற்ற முயன்றாலும்,** அவற்றை தன் இலட்சியக் குறிக்கோள் வழுவாமலிருக்கும்படி செய்கிறார். எவ்வளவு பெரிய சொத்தானாலும், எந்த ரத்தபாச உரிமையிருந்தாலும், உயில்படி சட்டம் ரத்தபாசத்திற்கு உயிர் கொடுத்தாலும், தன் மனச்சாட்சிப்படி பிறர் இனிக்க தான் வாழ வேண்டும் (as a gentleman) என்ற கொள்கைப்படி டாக்டர் தொழில் தர்மத்தையும் உயில் கடமையையும் நிறைவேற்றினார். **நிறைவேற்றியபொழுது சமூகத்தைக் கடந்த வாழ்வில் தன் செயல் ஒரு வாய்ப்பை உருவாக்குவதை டாக்டர் அறியார்**. எந்தப் பணத்தை அரபெல்லா பிரான்ங்குக்கு நாடினாரோ, டாக்டர் பிரான்ங்குக்கு அந்த பணத்தை தன் கையால் மேரி மூலம் கொடுத்து விட்டார். எனவே டன்ஸ்டபிள் பணம் அவருக்கு வருவது அந்த சட்டப்படி சரியல்லவா? டன்ஸ்டபிளுக்கு மேரி, பிரான்ங்க் இருவரையும் பிடிக்கும் என்பது பணத்தை மனத்தாலும் நாடாத டாக்டரை அவளுக்கும் பிடிக்கும் என்பதன் பிரதிபலிப்பு என்பது உண்மையாகாதா? டன்ஸ்டபிளுக்குப் பணமிருந்தாலும் தேவைப்படுவது அந்தஸ்து. மொபட்டால் அந்த அந்தஸ்து வராது. ஜார்ஜ் – பிரபுவின் மகன் – அவளை மணக்க விரும்பி கடிதம் எழுதினான். அவனை மணந்திருந்தால் அந்தஸ்த்தை தேடியது அப்பட்டமாக பெருகி வரும். டாக்டருக்கு பட்டம், பதவி, பணம் தரும் அந்தஸ்தில்லை. பழம்பெரும் குடும்ப அந்தஸ்திருப்பதால் இப்பணம் அதற்கு மீண்டும் உயிர் கொடுத்து டன்ஸ்டபிளையும், அவரையும் உயர்த்தும். அவள் டாக்டரைத் திருமணம் செய்தபின் அது பணமாக மட்டுமின்றி சொத்தாக, பழம்பெரும் சொத்தாக வந்தது. **வாய்ப்பு எதன் மூலமாக வருகிறதோ அதன்**

**சாயலிருக்கும்.** ஜேனுக்கு அழகு வாய்ப்பை அளித்தது. அது பிங்லி. புதுப்பணக்காரன். எலிசபெத்திற்கு குணம் வாய்ப்பை அளித்தது அது பெம்பர்லி. யாருக்கு எந்த வாய்ப்பு வந்தாலும் வரும் வழி, மனித சந்தர்ப்பம், நேரம், காலம், இடம் அந்த வாய்ப்பின் அம்சங்களை நிர்ணயிக்கும். டாக்டருக்கு வந்த வாய்ப்பு மேரியின் நல்லெண்ணத்தாலும் நன்றியாலும் வருவது. அவள் பெற்ற அந்தஸ்தின் சாயல் அவருக்கும் வருவது வாழ்வு வழங்கும் சட்டம்.

**வாய்ப்பு என்பதை மனிதன் இலாபம், ஆதாயம் எனக் கருதுகிறான்.** வாய்ப்பை வாயிலாகக் கருதுவது சரி. வாய்ப்பு சேவைக்கு வரும், ஆசை அல்லது பேராசைக்கு வாராது. நாம் ஆசையை விட வேண்டும் என்றால் ஆசை வளரும் எனத் தெரியாது. ஆசைக்கு இடமே கொடுக்க மாட்டேன் எனில் ஆசை பூதாகாரமாக வளர்ந்து தவிர்க்க முடியாதபடி தன்னை வற்புறுத்தும். வாய்ப்பு எளிய மனிதனுக்கு வருவதில்லை. **இலட்சிய மனப்பான்மைக்கு வாய்ப்பு வரும்.** பெரிய அகில இந்திய ஸ்தாபனத்தில் கடைசி ஊழியருக்கு முதல் ஸ்தானம் வாய்ப்பாக வந்தது. அவர் சரியான மனப்பான்மையுடன் பெற்றுக் கொண்டார். முதல் ஸ்தானத்திற்கு வந்தார். நான்கு லட்ச ரூபாய் வியாபாரம் ஆகும் புது கம்பனிக்கு நான்கு கோடி ரூபாய் ஆர்டர் தேடி வந்தது அன்னை தரும் வாய்ப்பு. அதை பேராசை ரத்து செய்தது. வெறும் பெண்ணை பெரும் பிரபு திருமணம் செய்ய முடிவு செய்வது உலகம் அடிக்கடி அறியாத வாய்ப்பு. **அதை ஏற்கும் மனநிலை வந்தால் மனம் உடையும்.** பெண் ஏற்றாள். மனம் உடையவில்லை. பிரபுவின் மனைவியானாள். டாக்டர் தார்ன் டிரஸ்டியாகப் போட்டது அவருக்கு வாய்ப்பாகத் தெரியவில்லை. வம்பாக நினைத்தார். **வாயை மூடிக்கொண்டு அதை ஏற்பது எவரும் செய்வது.** அதனுள் புதைந்துள்ள சிக்கலை வெளியே எடுத்து விளக்கமாகச் சொல்வது மனித சுபாவமில்லை. அவர் செய்தார். மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதால் செய்தார். **அவர் பட்டது பாரதம்.** ரோஜர் அவருக்கு அளித்த £1000 பரிசில் பெரும் பகுதியை கோர்ட் செலவு செய்தார். செலவு டிரஸ்டிக்குரியது. பணம் உயிலிலிருந்து வர வேண்டும். டாக்டரால் அப்பணத்தை தொட முடியவில்லை. கைப்பணத்தைச் செலவு செய்தார். வந்தது வெள்ளமாக வந்தது. பிரவாகமாக வந்து பெருகியபடியிருந்தது. பணம் அந்தஸ்துடன் பிரியத்தைக் கொண்டு வந்து சிறிய பொறுப்பை நிறைவேற்றாதவருடைய பெரிய பொறுப்பு உயிர் பெற்று உலகில் பவனி வந்தது. **வாய்ப்பு – பிரச்சினை என்ற தலைப்பு மூலம் *The Life Divine*இன் முக்கிய கருத்துகளை விளக்கமாக அறியலாம்.** தெளிவாக அவற்றை மனம் பெற்றபின் சில நாள் கழித்து அவற்றைப் புரிந்து கொண்டதும் நினைவு வராது. ஆன்மீகம் பெரும் தத்துவங்கள். வேதம் யாகம் மூலம் தெய்வத்துணை நாடி சச்சிதானந்தமடைய வழி சொல்லியது. அது துறவிக்குப் பொருந்தும் எளிய மனிதனுக்கு எதுவும் புரியாது. அவனளவில் அந்த உயர்ந்த தத்துவத்தை எப்படிப் பின்பற்றுவது என்பது அவனுக்குப் புரியும். **அதிகாரத்தைக் கைவிட்டு குலதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது புரியும்.** பகவான் சித்தாந்தம் பகவன்தாஸுக்கே புரியவில்லை என்பதும் உண்மை. அன்னை ஆசிரமத்தில் சாதனையை சேவையாக ஏற்க செய்த ஏற்பாடு எவருக்கும் புரியும். அன்பர்கள் பூரண யோகம் பெரும் வாய்ப்புகளைப் பெறும் கட்டங்கள். 1) கெட்டதை விலக்கி நல்லதை செய்வது, 2) உண்மை மட்டும் பேசுவது, 3) சிறிய ஆதாயத்தை விட்டு பெரிய இலட்சியத்தை ஏற்பது, 4) **சமர்ப்பணம் செய்வது**, இவை புரியவில்லை என எவரும் கூற முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் தத்துவம் விளங்கினால் **அது புரியும், பலிக்கும், நிலைக்கும். சிறு விஷயம் சிறப்பானால் பெரு விஷயம் தானே பூர்த்தியாகும்** என்பது தெளிவு. குளிக்கப் போகும் பொழுது உடையை அவிழ்த்து மேஜை மேல் போடக்கூடாது, அழுக்குக் கூடையில் போட்டால் ஆபீஸ் பிரமோஷன் கூடி வரும் என்பது நடைமுறையில் தத்துவத்தை விளக்குவது. மேரி 12 வயதில் வந்தபொழுது கிரஷாம் பெண்களுடன் படித்தாள். பாட்டு கற்றுக் கொண்டாள், வளர்ந்தாள். **அவளுக்கு பாடம் கிரஷாம் வீட்டில் மற்ற பெண்களுடன் கற்பிக்கப்பட்டது.** லேடி அரபெல்லா அந்தஸ்தை முக்கியமாகக் கருதுபவள், பிரியமான நேரம் எல்லாவற்றையும்

தருவாள். மனம் அவளுக்கு மாறக்கூடியது. நிலையற்ற பெண். எதுவும் பேசுவாள். பின்னால் அப்படியே நடந்தாள். டாக்டர் விபரம் தெரிந்தவர். விவேகி. ஆதாயம் தேடாதவர். மேரிக்கு பாட்டுக்கும் படிப்புக்கும் பணம் கொடுக்க முன் வந்தார். அரபெல்லா ஆர்ப்பாட்டம் செய்து மறுத்தாள். டாக்டர் இனாமாகப் படிக்க சம்மதிக்கவில்லை. பணம் கொடுத்தார். பின்னால் தொந்தரவு வந்தபொழுது டாக்டரின் செயல் எப்படி முக்கியம் என விளங்கிற்று. **அந்தச் சிறு தொகையை அன்று டாக்டர் ஏற்றுக் கொண்டிருந்தால் பின்னால் அப்பெரிய சொத்து வந்திருக்காது**. உலக சரித்திரம், உலகப் போர்கள், இந்திய சுதந்திரம், நாட்டு அரசியல், நம் குடும்ப வாழ்க்கை ஆகிய இடங்களில் தினமும் இவை நடக்கின்றன. நாம் கவனிப்பதில்லை. 11,000 ரூபாய்க்கு வாங்கிய சொத்தை அபிவிருத்தி செய்ய ஒரு இலட்ச ரூபாய் பாங்கிடம் ஒரு நண்பருக்காக பெற்றவருக்கு மனம் பரநலம் வாய்ந்தது. அந்த திட்டத்தை படித்து மெச்சியவர் அடுத்த ஆண்டு எழுதியவர்க்கு 200 ஏக்கர் வாங்க உதவி செய்தார். வாய்ப்புகள் நேரடியாக வரும். தலைகீழே வரும். எந்த ஸ்தாபனத் தலைவரும் ஊழியரை “உங்களுக்குரிய பிரமோஷனை அடுத்தவர்க்கு தர பிரியப்படுகிறேன்” என்று கூற மாட்டார். கோள் சொல்பவர்கள், குதர்க்கவாதிகள், ஆதாயம் நாடுபவர்கள், விஷமிகள் அப்படித் தூண்டினால் அதற்கு இசைபவன் தலைவனில்லை. “வாய்ப்பு” செயல்பட்டது. அந்த ஸ்தாபனம் 25 ஆண்டுகளில் பெற்ற நன்கொடையைப் போல் இருமடங்கு நன்கொடை கொடுக்க ஒரு பெரிய கம்பனி முன்வந்தபொழுது ஸ்தாபனப் பெயர் மாறாட்டத்தால் அப்பணம் நேர் எதிரிக்குப் போய் விட்டது. **யார் வேண்டுமானாலும் எதையும் செய்யலாம்,** வாழ்க்கை வழி தவறாமல் நெறியாக செயல்படும். அது Life Knowledge சூட்சும அறிவு. பூரண யோக நடைமுறையை பகவான் கூறும்பொழுது, சாதகர்கட்கு சட்டம் கிடையாது. அவரே தன் தெளிவால் சட்டங்களை ஏற்று செயல்பட வேண்டும் என்றார். **ஒருவர் தானே ஏற்காத சட்டத்தை முறையாகக் கடைப்பிடிக்க மாட்டார்**. Hourly Consecration சக்தி வாய்ந்தது என்று தெரிந்திருந்தாலும் பின்பற்ற அன்பர்கள் முன் வர மாட்டார்கள். பின்பற்றுபவர் பலனைப் பார்த்தும் ஏற்கமாட்டார்கள். இது யோக சுதந்திரம். **சுதந்திரம் யோகம் சித்திக்கும் வாய்ப்பு**. யோகம் சித்திக்க வாய்ப்பாக அமையும் சுதந்திரத்தை யோகத்தை இழக்கும் வாய்ப்பாக பெறுவது சுபாவம். பூரண யோகம் பூரணமான யோகம். பிரபஞ்சத்திலேயே விரயமற்ற பூரணம் செயல்படுவதைக் கூறுகிறது. நாம் அவ்வாய்ப்பால் பலன் பெறுவது விரும்பத்தக்கது.

கிளன்கோரா தாய் தகப்பனற்ற அநாதை. அவள் சொத்து அரச குடும்ப வருமானம் £50,000 தரும். 15 அல்லது 16 வயதில் பர்கோ என்ற அழகிய இளைஞனை நடனத்தில் சந்திக்கிறாள். **அவன் பெற்றது அழகு என்று கூற முடியாது.** அவனைக் கண்டவர் பேச்சிழந்து, செயலிழந்து, தன்னை மறந்து, பரவசப்பட்டு இது போன்ற அழகிய முகத்தை நான் கண்டதில்லை எனக் கூறுவர். அதற்குள் 5 அல்லது 10 நிமிஷமாகும். **அவன் தன் அழகைக் கருதியதேயில்லை.** அவன் மனத்தில் கெட்ட எண்ணம் எழுந்ததேயில்லை. எண்ணமே அங்கு உருவானதில்லை. வேட்டைக்குப் போவான் ஆனால் மனம் வேட்டையை நாடாது. சீட்டாட்டமும், குடியும் அப்படியே. அவனுக்கு நல்லது, கெட்டது என்பதில்லை. ஆனந்தமாக வாழ்வான். அதற்காக சூதாடுவான், ஜெயிப்பதும், தோற்பதும் அவனுக்குப் பொருட்டில்லை. £30000 அவனுடைய பணம், வெகு சீக்கிரம் அது கரைந்தது. சுமார் 30 பிரபுக்கள் குடும்பம் அவனுக்கு உறவு. எல்லா இடத்திலும் அவனுக்கு ஆனந்தமான அமோக வரவேற்புண்டு. எவரும் அவனை அழைத்து உபசரிப்பர். அவன் செலவு செய்யும் பணம் அதிகமில்லையென்றாலும் அது யாருடையது என அவனுக்குத் தெரியாது. £30,000 வட்டிக்கடைக்காரர்களிடமிருந்து கடன் பெற்று செலவு செய்து விட்டான். கொடுப்பது என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டதில்லை. **கிளன்கோரா அவனை மணக்க ஆசைப்பட்டாள்.** அவளது £50000 ஆண்டு வருமானமும் அதைத் தரும் 10 லட்சம் பவுன் சொத்தையும் அவன் யோசனையின்றி குறைந்த காலத்தில் செலவு செய்து நடுத்தெருவுக்கு வரக்கூடியவன். கிளன்கோராவின் இரு அத்தைகள் பெரும் சீமாட்டிகள் அவள் கார்டியன்கள்.

கிளன்கோரா அவன் மீது உயிராக இருக்கிறாள். அவளுக்கு அவன் போன்ற சுபாவம். எதையும் பொருட்படுத்தாமல் எந்த நேரமும் சந்தோஷப்பட வேண்டும் என்பதே நினைவு. **அனைத்தையும் அவசரமாக அழிக்கும் வாய்ப்பு அவனை எதிர்கொள்கிறது.** அதைத் தடுத்து பாலிசரை மணக்க வற்புறுத்துகிறார்கள். திருமணம் ஆனபின் அவளுக்கு தவறான எண்ணமில்லை. ஆனால் எண்ணத்தை மீறிய செயல் பர்கோவுடன் ஓடிப் போக ஆசைப்படுகிறது. கணவனிடம் தன் கருத்தைக் கூறுகிறாள். அவன் அதிர்ந்து போகிறான். அவளை வெளிநாட்டிற்கு அழைத்துப் போக முடிவு செய்கிறான். இங்கிலாந்தில் பிரதமருக்கு அடுத்த பதவி நிதி மந்திரி இருவருக்கும் சமமாக சம்பளம் £5000. நிதி மந்திரியாக 60 வயது தாண்ட வேண்டும். பாலிசர் முடிவு எடுத்தவுடன் அதே நிமிஷம் அப்பதவி அவனைத் தேடி வருகிறது. **ஏற்கவில்லை.** அதை 25 வயதில் பெற்றவரில்லை. பாலிசர் மறுத்து மனைவியை வெளிநாட்டிற்கு அழைத்துப்போய் ஒரு வருடம் கழித்து வருகிறான். மீண்டும் அப்பதவி வருகிறது. இரண்டாண்டிற்கு பின் பிரதமராகி மூன்று ஆண்டு கழித்து ராஜினாமா செய்கிறான். மனைவி இறந்து போகிறாள். இறப்பதற்கு முன் தன் மகள் மேரி டிரிகர் என்ற செல்வமற்ற இளைஞனை விரும்புவதை அறிந்து அவனை அழைத்து கணவனுக்குத் தெரியாமல் ஆமோதிக்கிறாள். கணவன் விஷயமறிந்து கொதிக்கிறான். பெரும் போராட்டத்திற்குப்பின் பாலிசர் மகள் திருமணத்திற்கு சம்மதிக்கிறான். வாய்ப்பு – பிரச்சினை என்ற கருத்தை 10 அல்லது 20 வகையாக விளக்க உதவும் கதையிது. டிரிகர் பணமில்லாவிட்டாலும் அன்றைய இலண்டன் இளைஞர் குழுவில் தெளிவான நெறியான நேர்மையான திறமையான இளைஞன். **அவன் மனம் மேரியின் பணத்தை நாடவில்லை. மேரியை நாடிற்று**. கிளன்கோரா பர்கோவை மணந்து அழித்திருப்பாள். அது அவள் ஆர்வமாக விரும்பியது. பெரியவர் தடுத்தனர். காப்பாற்றினர். தீராத தாயார் ஆசை மகள் வாழ்வில் நிறைவேறும்பொழுது பர்கோவின் குறை மாறி டிரிகருடைய நிறைவாகிறது. இது வாழ்வு வகுக்கும் பாதை. கிளன்கோரா அழியலாம், தன்னை அழித்துக் கொள்ளலாம். அதுவே அவள் விரும்புவது. வாழ்வு அதைத் தடுத்து அடுத்த தலைமுறையில் தாயார் ஆசையை மகள் வாழ்வில் சிறப்பாகப் பூர்த்தி செய்வதைக் காண முடியாமல் கிளன்கோரா மரணமடைகிறாள். ஆன்மீக சட்டப்படி ஆசை பூர்த்தியாவது மரணம். கிளன்கோராவின் ஆசை மகளில் பூர்த்தியாகவும் அவள் உயிர் தடையாகும். இது வாழ்வின் சட்டம். இறைவன் சட்டம் இதைக் கடந்தது. கிளன்கோராவின் சட்டம் ஆசையெல்லாம், “எனக்கு பர்கோ வேண்டும். என் சொத்தை அவன் அழிப்பது எனக்கு ஆத்ம திருப்தி. அதன் பிறகு என்னை அவன் அடிப்பான், கொல்லுவான் என்று நீங்கள் கூறுவதெல்லாம் உண்மையானால் **அந்த உண்மை எனக்கு இனிக்கும்**. என்னைத் தடை செய்து என் வாழ்வு அழியாமல் காப்பது எனக்கு உலகமிழைக்கும் கொடுமை” என்று கூறுகிறாள். ஆனால் திருமணமானபின் கணவனுக்கு உண்மையாக தியாகம் செய்து உழைக்கிறாள். தன் பெரும் சொத்தைக் கணவன் செலவு செய்யும்பொழுது அது என் பணம் என்ற எண்ணம் அவள் மனதில் எழவில்லை. **பர்கோ அவளை அழிப்பது யதார்த்தமான வாய்ப்பு**. பாலிசர் அவளை காப்பாற்றுவது சமூகம் தரும் வாய்ப்பு. அடுத்த தலைமுறையில் பழைய ஆசையை திருட்டுத்தனமாக நிறைவேற்றியது ஆழ்மன ஆசை சூட்சும உலகம் செயல்படும் வகை. அவளுக்காக அவன் செய்த பெரிய தியாகத்தை வாழ்வு ஏற்று மீண்டும் அவ்வாய்ப்பைக் கொடுத்து அடுத்த உயர்ந்த பதவியையும் தருவது வாழ்வு தரும் வாய்ப்பு. ஆசை அடுத்த தலைமுறையில் உயர்ந்து திருட்டுத்தனமாகப் பூர்த்தியாவது சூட்சும உலக வாய்ப்பு.

Antony Trollope 1880 வரை ஏராளமாக எழுதினார். ஏராளமாக சம்பாதித்தார். Charles Dickens அவர் காலத்தவர். பிரபலமானவர். அவர் கதைகள் சூறாவளியாக விற்பனையாயின. ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாக அவரைக் கருதுகின்றனர். வால்டர் ஸ்காட்டும் பெரும் புகழ் பெற்றவர். டிராலப் அண்ணனும் எழுத்தாளர். தாயார் பிரபலமான எழுத்தாளர். தகப்பனார் கலைக்களஞ்சியம் பாதி (சர்ச்சை பற்றியது) எழுதியவர். டிராலப் பாத்திரங்கள் மனநிலையைப் பிரதிபலிப்பதில் பிரபலமானவர்.

அவருடைய கதாநாயகிகள் சிறப்பானது போல் கதாநாயகர்கள் சிறப்புப் பெறவில்லை. **என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையை டிராலப் நன்கு அறிந்தவர்.** Thackeracy, Dickens ஆகியவர்க்கு creative imagination படைப்புக்குரிய கற்பனை அதிகம் என்பது பொது அபிப்பிராயம். அதனால் அவர்கள் பெரும் பிரபலமடைந்தவர் எனினும் **வாய்ப்பு, பிரச்சினை, வாழ்வு, வாழ்வின் எதிரொலி** டிராலப் கதைகளில் சிறப்பாக சித்தரிக்கப்படுகின்றன. காதல் வேறு, கல்யாணம் வேறு என்ற கருத்து இக்கதைகளில் தெளிவாக எழுவதைக் காணலாம். **வாய்ப்பு எங்குமிருந்தாலும், அதைப்** பெறும் தகுதியுடையவர்க்கே அது போகும். மன உறுதி என்பது எதையும் பெற அவசியம். உடல் உறுதியில்லாமல் மன உறுதி எழாது. உடல் உறுதி அடுத்த தலைமுறையில் மன உறுதியாவதால் உடல் உறுதி உடல் நலமாக மாறி மென்மையுறும். மென்மை வலிமையை இழக்கும் மென்மையாக இருப்பதும் உண்டு. **மென்மை மனவலிமையாக செல்வம் என்ற அடிப்படை தேவை.** பெரிய குடும்பம், நல்ல குடும்பம், உயர்ந்த குடும்பம், உத்தமமான பெண், தவறறியாத கனவான் என்பவை ஒரு தலைமுறையில் எழுவனவில்லை. டிராலப் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் சமூகம் மாற ஆரம்பித்து விட்டது. *Pride and Prejudice* இல் அந்த ஆரம்ப நிலைகள் சித்தரிக்கப்படுகின்றன. **அது விக்டோரியா மகாராணி ஆண்ட காலம்.** நெறியாய் வாழ்ந்த உலகம் நெறி தவறிய நூற்றாண்டு. 1960 முதல் 1990 வரை நம் நாட்டில் லஞ்சம் பரவியது, வாழ்வின் தூய்மை குறைய ஆரம்பித்தது. மாணவர்கள் காப்பியடித்தனர். பத்திரங்கள் பொய்யாக எழுதப்பட்டன. படிக்காத மாணவர்கள் பட்டம் பெற்றனர். கறுப்புப்பணம் பாங்குக்கு வந்தது. இவை தவறில்லை என்ற மனப்பான்மை பரவ ஆரம்பித்தது. அது இங்கிலாந்தில் நெறியான வாழ்வு நெருப்பாக இருந்தது நெருப்பு கரியாகி விட்டது. தோற்றமே முக்கியம், விஷயமில்லை என்பது நிலையாயிற்று. ஆங்கிலேயன் வார்த்தை தவறாதவன். அவனால் பாரபட்சமாக இருக்க முடியாது. நேர்மை தவறாதவன் என்று உலகப்பிரசித்தி பெற்றவன் பெண்கள் விஷயத்தில் கெட்டுப் போவது தவறில்லை என்ற கருத்து நிலைபெற்றது. ஆண்கள் நடத்தை முழுவதும் கெட்டபின் கேட்பாரில்லை என்றபின் **பெண் நெறியாய், நெருப்பாயிருந்தாள்**. இது *Pride and Prejudice* காலம். டிராலப் காலத்தில் காலம் மாறியது. பெண்கள் தங்களையே நெறிப்படுத்திகொள்ள வேண்டும் என்பது பரவியது. காலம் மாறி நெறி தவறுவது உலகம் ஏற்பது என்ற நிலையை ஏற்றபின் **நெறியாக முறையாக அழகாக வாழ முயன்றவர் முயற்சி பெரு முயற்சி**. டிராலப் அவர்களைப் பற்றியே எழுதியதால் சிறப்பான எழுத்தாளரானார். அவர் மகன் சில்வர் பிரிட்ஜ் **விளையாட்டிற்கும் பொய் சொல்ல முடியாதவன்.** காலம் மாறும் நேரம் மனம் அலைபாயும் நேரம். Dr.தார்ன் அது போன்ற தீவிர சூழலில் சிக்கியவர். இக்காரணங்களால் டிராலப் கதைகள் வாய்ப்பு பிரச்சினையாக மாறும் காலம் என்பது தெளிவு. **மாறும் காலத்தில் மாறாத பெண், மாறாத கதாநாயகன் உத்தமன், உயர்ந்தவன், ஒப்புயர்வற்ற பாத்திரம்**. அவர்கள் வாழ்வு மூலம் வாழ்வு தன் நெறியை செயல்படுத்துவது போற்றத்தக்கது. தார்ன் கதையில் இது அற்புதமாக வருவதால் நீண்ட விளக்கம் தர அதை நான் நாடினேன். வாய்ப்பு – பிரச்சினை என்ற கருத்தை ஓர் அன்பர் ஆராய்ந்து உணர்ந்தால் அவர் வாழ்வு அதிர்ஷ்டமயமாகும். ஜெயிலில் இருந்த கைதியை விடுதலை செய்து பெரிய பதவியை அளித்து கௌரவித்தது போலாகும். கைதி விடுதலையானாலும் சமூகம் அவனை ஒதுக்கும். அரசியல் கைதி விடுதலை செய்யப்படுவது கௌரவமான வரவேற்பு பெறுவார். சில சமயம் அவருக்குப் பதவி காத்திருக்கும். சிறைவாசம் வாழ்வு திருவுருமாறிய காலமானது பலர் அனுபவம். N.S.கிருஷ்ணன் சிறைவாசத்தால் மனம் மெருகுபெற்று பெரும் தலைவனானான். தண்டனை அப்படிப்பட்ட ஆத்மாவுக்கு அருளாகும்.

ஜென்ம பலன் என்ற வழக்கு கூறுவது பெரும் பலன் பெற உழைப்பு போதாது. உழைப்பு அறிவாகி, பண்பாவது ஜென்ம பலன். **இது மனித வாழ்வில் அனைவருக்கும் கிடைப்பதில்லை**. தொண்டராகப் பிறந்து தொண்டராக இறப்பவரே 90 பேர். மீதி பத்து பேருக்கு ஜென்ம பலன் தொண்டர் தலைவராவது.

ஆயிரத்திலொருவர் ஒரு ஜென்மத்தில் பல ஜென்ம பலன் பெறுவார். **அன்னையை தரிசித்தவர் அனைவருக்கும் ஜென்ம பலன் உடனே கிடைப்பதை அன்பர்கள் தவறாது காண்பார்கள்**. கர்ணனுக்கு தாயார் யார் தகப்பனார் யார் என அறியும் ஆவல் உடலை உருக்கியது. சமூகம் ஏற்காவிட்டால் ஏற்படும் ஆர்வம் அது. பிரபஞ்சம் ஏற்காவிடில் சிருஷ்டி ஏற்காவிடில் ஏற்படும் ஆர்வம் பக்தி. அப்பக்தி வெளிப்படுவது ஞானம். ஞானம் முதிர்ச்சியடைவது மோட்சம், சித்தி. **ஒருவர் ஞானம் உலகுக்கு சித்தி தருவது திருவுருமாற்றம்.** இதையடையும் வகை பல. சத்தியத்தை மட்டும் கடைப்பிடிப்பது ஒரு பெரு வழி. சத்தியம் முதற்காரியமாக மழை பொழியும். மழையால் தொந்தரவு விலகும். தொந்தரவு விலகுவதால் சுபீட்சம் பெருகும். பெருகும் சுபீட்சம் **வறண்ட வாழ்வை வெள்ளமாகப் பெருகும் நீரால் வளப்படுத்தும்.** வளம் பெரு உழைப்பால் பெரும் அதிர்ஷ்டமாகும். நிலமும் 28 டன் பயிரான கரும்பை 82 டன்னாகப் பெருக்கும். இது ஓர் ஊர் மக்கள் அனுபவம். 10 முதல் 20 ஆண்டில் அவர்கள் வாழ்வில் கண்ட அனுபவம். ஒரு முறை ஒரு விஷயத்தில் மெய் சொன்னதன் பலனிது. எல்லா சமயங்களிலும் எல்லா விஷயத்திலும் எல்லோரிடமும் உண்மை பேசினால் சத்திய ஜீவியம் வரும். அன்னையின் சூழல் உள்ள நிலத்தில் மண் வெட்டி எடுத்துக் கொத்தினால் **வேலைக்கு ஜீவன் வரும்**. ஜீவன் பெற்ற வேலை செல்வம் பெறும். ஏமாற்றும் மனம் எவரும் கண்காணிக்காமல் வேலை செய்யும். வேலை செய்யாமல் கூலி கேட்டு வாதாடி வம்படிக்கும் மனம் திருவுருமாறி வேலையை செய்து விட்டு கூலி கேட்க மனமில்லாமல் வீட்டிற்குப் போகும். நாள் முழுவதும் உழைத்தவன் சாராயம் சாப்பிட்டால் தன்னை மறந்து தூங்கி எழுவான். உண்மை பேசி, அன்னை சூழலில் மண் வெட்டியால் கொத்தி, செய்த வேலைக்குக் கூலி கேட்காமல் வீட்டிற்குப் போனால் உடல் மனத்தால் பிரியமாக நிரம்பி ஆன்ம திருப்தியுடன் சாராயத்தை மறந்து தூங்கி எழுவான். உடல் சாராயத்தை மறந்தால் உள்ளம் உழைப்பை நாடும். அது உழைப்பை சேவையாக்கும். சேவை செல்வத்தைக் குரல் கொடுத்து அழைக்கும். **மனித சுபாவம் குதர்க்கம், வக்கிரம், பேராசை,** வேலை சேவையானால் உடல் உழைப்பு பூமாதேவிக்கு செய்யும் சேவையாகி மனிதனால் கேட்கத் தெரியாத வளமான பேரூற்று நீராக அவள் வழங்குகிறாள். இதன் விளைவாக பரவலாக இருந்த திருட்டு மறையும், திருட்டு மனப்பான்மை மாறி சொந்த கௌரவமாகும். கோவணம் ஆடை ஒரு வேளை சாப்பாடு உயிரை உடலில் வைத்திருக்கும் என்ற நிலை மாறி வேஷ்டியும், சட்டையும் அணியும் ஆர்வம் ஏற்பட்டு, ஏற்பட்ட ஆர்வம் பூர்த்தியாகி மண்ணில் புரண்ட மக்களை ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்கும் வாய்ப்பு எழுந்து பூர்த்தியாகும். **ஒரு ரூபாயை காணாத மனிதன் எந்த நேரமும் 100 ரூபாய் நோட்டை பாக்கட்டில் பெறும் நிலை அவனுக்கும் அவனுடைய மக்களுக்கும் ஏற்படும்.** பள்ளிக்கூடம் போயறியாத மாணவன் பாஸ் செய்வான். பாஸ் செய்தவன் டிகிரி எடுப்பான். குமாஸ்தா வேலையை அறியாத குடும்பம் அவனுக்கு ஆபீசர் வேலையைப் பெற்றுத் தரும். ஆபீசர் வேலை அவனை தொழிலதிபராக்கும். அவன் ஊழியம் செய்த ஸ்தாபனத்தில் தலைவனாவான். அவனுலக Star நிலைக்கு உயர்வான். மனம் Silent Will ஆல் முதல்வர் கேட்டு ஒரு நகரத்திற்குக் கிடைக்காத டீலர்ஷிப் ஒரு மாநிலம் முழுவதும் தேடி வரும். ஒரு மாநிலம் பல மாநிலங்களாகி அகில இந்தியாவாகும். **எவரும் சீண்டாத மனிதனை அனைவரும் நாடி உதவி கேட்டுப் பெறுவர்.** இது வாய்ப்பின் வரலாறு. மனித சுபாவம் வாய்ப்பை மறுக்கும், ஏற்றால் பிரச்சினையாகும். பிரச்சினை ஆபத்தாகி வாழ்வு விரக்தியாகும்.

***வாய்ப்பு பிரச்சினையல்ல வாய்ப்பு***
***பெரு வாழ்வின் பெரு வாயில்***

---

மூலம் : ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவாற்றியவர் : திருமதி. வசந்தா லட்சுமி நாராயணன்

சொற்பொழிவாற்றிய தேதி : 17.11.15